தினமலர் ■ வியாழன் ■ பிப்ரவரி 28, 2019
நெல்லை
www.dinamalarnellai.com

# பாளை., சாரதா கல்லூரியில் தீபம் ஏற்றும் விழா

திருநெல்வேலி, பிப். 28–

பாளை., சாரதா கல்லூரியில் இறுதியாண்டு படிக்கும் மாணவிகளுக்கு தீபம் ஏற்றும் விழா மற்றும் கல்லூரி பேரவை சங்கங்களின் நிறைவு விழா நடந்தது.

கல்லூரி முதல்வர் மலர்விழி வரவேற்றார். திருப்பராய்த்துறை ஸ்ரீ ராமகிருஷ்ணா தபோவனம் செயலர் சத்யானந்த சுவாமிகள் தலைமை வகித்தார். ஆங்கிலத்துறை தலைவர் ரேணுகா சிறப்பு விருந்தினரை அறிமுகம் செய்து வைத்தார்.

நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலை., துணைவேந்தர் பிச்சுமணி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பேசுகையில், ''மாணவிகள் அரசு அளித்து வரும் வாய்ப்புகளை பயன்படுத்தி கொள்ள வேண்டும். படிக்கும் போது லட்சியத்தோடு படிக்க வேண்டும். லட்சியம், குறிக்கோளோடு இருந்தால் சிறப்பான வாழ்க்கையை அமைத்து கொள்ள முடியும்'' என்றார்.



பாளை., சாரதா கல்லூரியில் நடந்த விழாவில் மாணவிகள் தீபங்கள் ஏற்றி, உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

இறுதியாண்டு மாணவிகள் தீபங்கள் ஏற்றி, வாழ்க்கையில் சிறந்த நெறிமுறைகளை கடைப்பிடிப்பதாக உறுதிமொழி எடுத்து கொண்டனர்.

கல்லூரிச் செயலர் யதீஸ்வரி சரவணபவ பிரியா அம்பா ஆசி வழங்கினார். பிரியா சந்தான கிருஷ்ணன் மகாபாரதம் குறித்து உபன்யாசம் செய்தார்.

மாணவிகளுக்கு ஆளுமைத்திறன் சான்றிதழை ஸ்ரீமத் சத்யானந்த சுவாமிகள், அபேதானந்த சுவாமிகள் வழங்கினர். கல்லூரி கல்வி சந்திரசேகரன், மாணவிகள், பேராசிரியைகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.